விலை ரூபா: 5.00    பக்கங்கள் எட்டு    Registered as a News paper in Sri Lank..

# வலம்புரி

VALAMPURI

சங்கு 03    வள்ளுவர் ஆண்டு 2033    தை 24    புதன்கிழமை (06.02.2002)    தொலைபேசி 3378    ஒலி 49




# விஸ்வரூபம் எடுக்கும் மீனவர் போராட்டம் படையினரை முகாமுக்குள் முடக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

மீனவர்களின் நியாயமான கோரிக்கைக்கும் மறியற் போராட்டத்திற்கும் மதிப்பளித்து, அரசாங்கம் மிக விரைவில் உரிய பதிலைத் தரா விட்டால் குடாநாட்டில் படையினரின் நடமாட்டத்தை தடுத்து அவர்களை முகா முக்குள் முடக்கும் போராட்டமென்றை முன்னெடுக் கப்போவதாக வடமாகாண கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் புரட்சிகர தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி யுள்ளது.

நேற்று மீனவர் சமாசம் தற்போதைய மறியற் போராட்ட நிலைமை குறித்தும், எதிர்கால நடவடிக்கை முன்னெடுப்புக் குறித்தும் கூடி ஆராய்ந்தது. அதன் போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மீனவர்களின் நியாயமான போராட்டத்திற்கு நல்லதொரு முடிவை புதிய அரசு வழங்குமென்ற எதிர்பார்ப்பில் 7 நாட்கள் கடந்துவிட்டன.

(2ம் பக்கம் பார்க்க)

## யாழ் குடாவில் வேகமாகப் பரவும் காய்ச்சல்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் வேகமாகப்பரவும் காய்ச்சலினால் பெருமளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குடாநாட்டு வைத்தியசாலைகளில் காய்ச்சலுக்கு சிகிச்சைக்கென குடும்பம் குடும்பமாக வருவோர் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதுடன் வைத்தியசாலை விடுதிகள் வெளி நோயாளர் பிரிவுகள்

(8ம் பக்கம் பார்க்க)

# விடுதலைப்புலிகளின் படை பலமே தமிழரின் உரிமையை பாதுகாக்கும் !

## மட்டு-அம்பாறை அரசியல் பிரிவு வெளியீடு

(மட்டக்களப்பு நிருபர்)

**எமது படைபலம்தான் எம்மைப் பாதுகாக்கும் சமாதானத்தைத் தோற்றுவிக்கும் தமிழனின் படை தனிப்பெரும் படையாக, பலம் மிக்க படையாக இருந்ததால்தான் சமாதானத்திற்கான சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. என்பதைப் புரிந்து கொண்டு மக்கள் தங்க்ள் பணியைத் தொடரவேண்டும்.**

**இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள துண்டுப் பிரசுரம் ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.**

''தமிழனின் தேசியப் படையினை பலப்படுத்துவோம்'' என்ற தலைப்பில் விடுத்துள்ள அத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது. எமது தேசிய விடுதலைப் போராட்டம் இன்று முழு உலகத்தின் கவனத்தை யும் ஈர்த்துள்ளது. ஓர் உள் நாட்டு நெருக்கடியாக தோன்றிய ஈழத் தமிழர்களின் பிரச்சினை இன்று உலக கவனத்தை ஈர்க்கும் சர்வதேச நெருக்கடியாக விஸ்வரூபம் பெற்றுள்ளது.

இன்று புதிய அரசு பதிவியேற்றதும் புதிய ஆண்டில் மீண்டுமொரு சமாதான முயற்சி அனைத்துலக அவதானிப்பில்

## யாழ் மீனவர் விவகாரம்

## தமிழ்க் கூட்டமைப்பு எம். பிக்கள்

# நோர்வேத் தூதுக் குழு நாளை கொழும்பு வரும்

(கொழும்பு)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் சமாதான தூதுக்குழு நாளை வியாழக்கிழமை கொழும்பு வரவுள்ளது.

கொழும்பு வரவுள்ள நோர்வேயின் சமாதான தூதுக்குழு நிரந்தரமானதொரு யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவது தொடர்பாக பிரதமர் ரணிலுடனும், ஜனாதிபதி சந்திரிகாவுடனும் பேச்சுவார்த்தை

(8ம் பக்கம் பார்க்க)

# நாளைய ஹர்த்தாலுக்கு வணிகர் கழகம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மீனவர்க

கழகம் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறிவித்துள்

## தமிழ்க் கூட்டமைப்பு எம். பிக்கள் பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

(கொழும்பு)

யாழ் குடாநாட்டு மீனவர் சமூகம் மேற்கொண்டு வரும் மறியற் போராட்டம் தொடர்பாக யாழ் மாவட்ட எம்பிக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளளனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது தமிழ்க் கட்சியின் சார்பில் அ. விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா எம். பி ஆகியோர் கலந்து கொண்டனர். மீனவர் பிரச்சினை குறித்து தமிழ் எம். பிக்கள் பிரதமர் ரணிலிடம் தெரிவித்த போது, யாழ் குடாநாட்டு மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கக் கூடிய நிலைமை குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகவும்

(8ம் பக்கம் பார்க்க)

டுமொரு சமாதான முயற்சி அனைத்துலக அவதானிப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த கால கசப்பான அனுபவங்களினால், பல போராட்டங்களினால் பரிமாணம் பெற்ற எமது தனி அரசுப் போராட்டம் காந்தியப்பாதையில் அமைதி வழியில், மொழியுரிமை கோரி, உரிமை கோரி, சமஷ்டி கோரி நடைபெற்ற அகிம்சை வடிவப் போராட்டங்கள் அனைத்துமே அடக்கி ஏமாற்றப்பட்ட நிலையில் சுய நிர்ணய உரிமையின்

(2ம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் வகையில் நாளை வர்த்தக நிலையங்களை பூட்டி பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று யாழ் வணிகர் கழகம் வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளது. மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக நாளை இடம் பெறும் ஹர்த்தாலுக்கு வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை (8ம் பக்கம் பார்க்க)

## மீனவர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கிட்டும்

### பிரதி அமைச்சர் முஹைதீன் பேட்டி

(கொழும்பு)

வட பகுதி மீனவர்கள் மேற்கொண்டுவரும் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்றொழில் பிரதியமைச்சர் முஹைதீன் அப்துல் காதர் தெரிவித்துள்ளார்.

சக்தி . வானொலிக்கு நேற்று இரவு அளித்த விசேட பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் வடபகுதி மீனவர்களின் பிரச்சனை குறித்து

(8ம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தலை வட – கிழக்கில் ஒத்திவைக்க பிரதமர் ரணில் சம்மதம்

### உரிய காலத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்யவேண்டுமாம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திவைத்தாலும் அதற்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதை பிற்போட முடியாதென்று பிரதமர் தெரிவித்தார்.

இந் நிலையில் உளளூராட்சி தேர்தல்கள் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்கு விளக்கப்படுத்துமாறு கூட்டமைப்பின் எம்பிகளை அமைச்சர் பீரிஸ் கேட்டுக் கொண்டுள்ளார். இதனை அடுத்து விடுதலைப்புலிகள் உள்ளூராட்சித் தேர்தல்களை விரும்பவில்லை என்று கூட்ட

(8ம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாய்கள் மூவர் சிறுமி மீது வல்லுறவு முயற்சி

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் புறநகர்ப்பகுதியான உவர் மலையில், ஏழு வயதுத் தமிழ்ச் சிறுமி ஒருத்தியைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்த இராணுவ வீரர்கள் மூவர் எடுத்த முயற்சியை அப் பகுதி மக்கள் முறியடித்தனர். ஒரு இராணுவ வீரரை மக்கள் பிடித்து மரத்தில் கட்டி வைத்து பொலிசாரிடம் ஒப்படைத்தனர். மற்ற இரண்டு படையினரும் அந்த இடத்திலிருந்து தப்பி ஓடிவிட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம்

(8ம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி மீண்டும் பழைய இடத்தில்

### 18ம் திகதி முதல் இயங்கும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி எதிர்வரும் 18ம் திகதி திங்கட் கிழமை முதல் சாவகச்சேரியில் இயங்குமென கல்லூரியின் அதிபர் ஆர். கைலைநாதன் தெரிவித்துள்ளார்.

இதற்கான ஆயத்தங்களை செய்வதற்கு வசதியாக 09, 10ம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு பெற்றோர்களையும், பழைய மாணவர்களையும், நலன் விரும்பிகளையும் சமூகம் தருமாறு அதிபர் கேட்டுள்ளார்.

(வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இராசி பலன்

(06 - 02 - 2002)
(தை 24, புதன்)
நவமி மு. ப. 11-02வரை
ராகுகாலம் மு. இ. 8-26 வரை
ராகுகாலம் 12.35 - 2.05
நல்லநேரம் 5.05 - 6.35
அமிர்தசித்தம்

**மேடம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல்வியாதி, பிரயாணபயம் காரிய தடங்கல்.

**இடபம்**
காரிய அனுகூல,ம் தனவரவு, தர்மம்,புதிய திருப்பம்

**மிதுனம்**
மனமகிழ்ச்சி, தொழில் முன்னேற்றம், பகைவர்நேசம் காரிய ஜெயம்.

**கடகம்**
தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, முயற்சி தாமதம் பிரயாணம்.

**சிங்கம்**
மனச்சஞ்சலம் காரிய ஜெயம், கீர்த்தி, பெரியோர் உதவி.

**கன்னி**
நினைத்தகாரியம்கைகூடும், பொருள்சேர்க்கை, அன்னியர் சந்திப்பு, பிரயாணம்.

**துலாம்**
பொருள் விரயம்' வீண் வார்த்தை, முயற்சிதாமதம், உறவினர்சந்திப்பு.

**விருச்சிகம்**
தொழில் நன்மை. சென்ற இடத்தில்செல்வாக்கு,முயற்சி கைகூடும், கற்பனை மிகுதி

**தனுசு**
நண்பர்கள்உதவி,அமைதிக் குறைவு, பிரயாண கஷ்டம், காரிய தாமதம்.

**மகரம்**
செய்தொழில் லாபம், காரியம் கைகூடும், வரவேற்பு, உஷ்ணவியாதி.

**கும்பம்**
தொழில் நன்மை, முயற்சி கைகூடும், அதிகாரம், நல்ல சம்பவம்.

**மீனம்**
கட்டுப்பாடு காரியதாமதம், உத்தியோக நன்மை பிரயாணம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# மீனவரின் மறியல் போராட்டத்தால் யாழ். செயலகம் முற்றாக ஸ்தம்பிதம்!

(யாழ்ப்பாணம்)
ஒரு வாரகாலமாகத்தொடரும் மீனவர்களின் மறியல் போராட்டத்தினால் நேற்றும் யாழ். அரச செயலகம் மற்றும் யாழ். பிரதேச செயலகம் ஆகியவற்றின் பணிகள் முற்றாக ஸ்தம்பித்தன.

நேற்றைய போராட்டத்திலும் பெருமளவான மீனவக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர். பொது அமைப்புகள் அரசியல் கட்சிப் பிரமுகர்கள் மற்றும் மனிதநேய அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர்கலந்து கொண்டு ஆதரவுவழங்கினர்.

ரெலொ பிரமுகரும் தமிழ்க் கூட்டமைப்பினயாழ்மாவட்ட எம். பி.யுமான எம். கே. சிவாஜிலிங்கம் உடல் நலக் குறைவு உள்ளபோதும் நேற்றும் யாழ். செயலகத்துக்கு வந்து போராட்டத்தில் கலந்துகொண்டார்.

குடாநாட்டு மீனவர்களின் போராட்டத்துக்கு திருகோணமலை மீனவர் சங்கச் சமாசம் மற்றும் மன்னார் மீனவர் சங்கச் சமாசம் ஆகியவையும் தமது ஆதரவைத் தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளன.

இதேவேளை மீனவர்களின் அடிப்படைப்பிரச்சினையான ஜீவாம்சப் பிரச்சினைக்கு தீர்வை எதிர்பார்த்து பல பொது அமைப்புக்களின் ஆதரவுடன் மீனவர் மேற்கொள்ளும் போராட்டம் 7 நாட்கள் கடந்த போதிலும் அரசு பாராமுகமாகஇருப்பது குறித்து குடாநாட்டு மக்கள் பெரிதும் விசனமடைந்துள்ளனர் (இ-59-19-10)

# சிறையில் புகை பிடிப்பவர்களால் பெரும் அவஸ்தைப்படுகிறேன்

## மதனராஜா நீதிபதியிடம் முறையீடு

(யாழ்ப்பாணம்)
யாழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் பலர் புகைத்தல் பழக்கமுடையவர்களாக இருப்பதால், அவர்களோடு சேர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஆஸ்மா நோயாளியான தான் பெரும் அவஸ்தைக்குள்ளாவதாக ஊர்காவற்றுறைப் பிரதேசசபைத் தலைவர் என். மதனராஜா யாழ் நீதிவான் நீதிமன்ற நீதிபதி இ. த. விக்னராஜாவிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று நாரந்தனைப் படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை யாழ் நீதிவான் நீதிமன்றில் நீதிபதி விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போதே மதனராஜா நீதிபதியிடம் மேற்கண்டவாறு தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

அத்துடன் சிறைச்சாலையில் ஒரேஅறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளில் பலர் புகைத்தல் பழக்கம் உடையவர்களாதலால் அப்புகையினை ஆஸ்மா நோயாளியான தன்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்றும் மதனராஜா கூறினார்.

கைதியின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிபதி, சிறைச்சாலை அதிகாரிக்கு அவசர கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அக் கடிதத்தில்.. நபரொருவர் பாதிக்கப்படத்தக்க வகையில் புகைபிடிப்பது சட்டத்துக்கு முரணான நடவடிக்கை என்றும் அவ்விடயம் குறித்து சம்மந்தப்பட்டோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் கைதிகளின் குற்றம் நிரூபிக்கப்படும்வரை சந்தேக நபர்களே ஒழிய குற்றவாளிகள் அல்ல என்றும் குறிப்பிட்ட நீதிபதி சந்தேக நபர்களின் நலனை பாதுகாக்க வேண்டிய கடமை சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் ஊழியருக்கும் உண்டென்று அறிவுறுத்தியுள்ளார். (இ-10)

# அரசிற்கு அழுத்தம் கொடுக்க பொ.ஐ.முன்னணி தயாராகிறது!

## புதிய எதிர்க்கட்சித்தலைவர் அறிவிப்பு

(கொழும்பு)
புதிய அரசாங்கம் மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்கத் தயார்என எதிர்க்கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் கட்டடத்தில் நேற்று பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மக்களுக்குநன்மை பயக்கக் கூடிய திட்டங்களை அரசாங்கம் முன்வைக்குமாயின் அதற்கு எதிர்க்கட்சி ஆதரவு வழங்கும் அதேவேளை ஜனநாயக விரோத செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுமாயின் அதனை எதிர்க்கவும் சித்தமாக உள்ளது.

மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்பிற்காக அரசிற்கு அழுத்தத்தை கொடுக்க கட்சி தயாராகிவருகிற தெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கட்சித்தலைவராக தனது பெயரை பிரேரித்த ஜனாதிபதிக்கும். அதனை வழிமொழிந்த லக்ஷ்மன் கதிர்காமருக்கும் நன்றி தெரி

யாழ். பல்கலைக்கழக

# கல்வியியல் முதுமாணி தேர்வில் 50 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)
யாழ் பலகலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணி தேர்

எஸ். புஸ்பலிங்கம், ஏ. இராஜேந்திரன், எம். இராசநாயகம், ஏ. ரவீந்திரன், வை. ரவீந்திரன், ஏ. எம். ரவீந்திரன்

விஸ்வரூபம்

# உடற்கல்வி மாணவருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். பல்கலைக் கழக உடற்கல்விப் பிரிவின் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களை நாளை வியாழக்கிழமை காலை பல்கலைக் கழகஅடையாள அட்டைகளுடன் விரிவுரை மண்டபத்தில் கூடுமாறு உடற்கல்வி மாணவர்மன்றம் கேட்டுள்ளது.

## அடையாளஅணிவகுப்பு

(கொழும்பு)
கண்டி உடவளவ பிரதேசத்தில் பத்து முஸ்லிம் இளைஞர்கள் தேர்தல் தினத்தன்று படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அடையாள அணிவகுப்புஎதிர்வரும் 18ஆம் திகதி நடைபெறவுள்ளது. (உ-8)

## விடுதலைப் புலிகளின்

அடிப்படையிலான தனியரசுக் கோரிக்கை பிறந்து அது ஆயுதப்போராட்டமாக வடிவம் பெற்றது.

நாம் ஒருதேசியஇனம்என்ற ரீதியிலும், வரலாற்று ரீதியாக அமைந்த எமது பாரம்பரிய தாயகப் பூமி எமது சொத்துடமை என்பதாலும் எமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயிக்கும் சுய நிர்ணயஉரிமை எமக்குண்டுஎன்பதாலும் தமிழ்மக்கள் பாதுகாப்பாக வாழக்கூடியதீர்வையே எதிர்நோக்கி நிற்கின்றனர்.

தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கும், சுய கௌரவத்திற்கும் படையுடன் கூடிய தீர்வையே எதிர்பார்த்துநிற்கின்றனர். தமிழரின் படைப்பலம் தான் இன்று அனைத்துலகங்களையும் தமிழீழத் தமிழனின் பிரச்சினையில் தலையிடச்செய்தது.

எமது அன்பிற்கினிய தமிழ் பேசும் மக்களே !

விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தைஅறிவித்ததும் புதிதாக பதவியேற்ற ஐக்கியதேசியக் கட்சியரசும் ஒருமோதல்தவிர்ப்பு ஒப்பந்தத்தை அறிவித்துள்ளது.

ஆனாலும் இந்த மோதல் தவிர்ப்பு ஒப்பந்த அறிவிப்பிற்குப் பின்னர் மட்டக்களப்பு -அம்பாறை மாவட்டத்தில் சிங்கள இராணுவத்தின்புதிய காவல் அரண் அமைப்புக்களும் படை மாற்றங்களும் சோதனை கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அனுபவபூர்வமாகவேஅறிந்து கொண்டிருக்கின்றோம்.

சிறிலங்கா கடற்படைக்கும் புதிய படைச் சேர்ப்புக்கள் நவீனரக அதிவேக கடற்படைக் கலன்கள், பல்குழல் பீரங்கிகள் கொள்வனவு

யாழ். பல்கலைக்கழக

# கல்வியியல் முதுமாணி தேர்வில் 50 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

யாழ் பலகலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணி தேர்வில்தோற்றிசித்தியடைந்தோரின் பெயர் விபரங்களவெளியாகியுள்ளன.

சித்தியடைந்த 50 பேரின் விபரம் வருமாறு.

ஏ.அகிலதாஸ், எம்.அரியரட்ணம், பி. அருட்க்குமார், பி. அருணகிரிநாதன், கே. அருந்தவபாலன், திருமதி ரீ.தீபராஜன்ஏ.இளங்கோ, ரீ.ஞானசுந்தரன், பீ.ஞானதேசிகன், எம்.ஜெயக்குமார், வி.கந்தசாமி. திருமதி ஆர்.குட்டித்தம்பி, கே.மங்களேஸ்வரன், கே.எஸ்.முகுந்தன், திருமதி எஸ்.முகுந்தன், திருமதி எஸ். நந்தகுமார் , வி.பரராஜசிங்கம், திருமதி பி.பத்மநாதன் எஸ்.புஸ்பலிங்கம், ஏ.இராஜேந்திரன், எம்.இராசநாயகம், ஏ.ரவீந்திரன், வை.ரவீந்திரன், ஏ. எம்.ரவீந்திரன், சி. என் .சத்தியநாதன் ரி. செல்வராஜா வி.செல்வராசா எஸ். சண்முககுமார், எஸ் எஸ். சண்முகநாதன், எம். சண்முகரத்தினம், திருமதி.வி சண்முகரட்ணம், செல்வி . எஸ். சிவகுரு, திருமதி.எஸ் சிவநாதன், ஏ. சிவநாதன், செல்வி. என்.சோமசுந்தரம் செல்வி. எஸ்.சுப்பிரமணியம் எஸ். சுந்தரசிவம், கே.தர்மராஜா, என் தவபாலன், ரி. தயாபரன், திருமதி. ஏ. வேலுப்பிளை, திருமதி ஆர். விக்ரர், என். விமலநாதன் திருமதி. கே. விமலராஜா.

(ந)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர்

திரு. சி. சிவராசா

அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி அன்னமுத்து சின்னையா

அவர்கள் 04 - 02 - 2002ல் அமரத்துவம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம் .

அலுவலர்கள்,

மேலதிக மாகாணகல்விப்பணிப்பாளர்,

(சி-3443) அலுவலகம். யாழ்ப்பாணம்.


...பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து உரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மக்களுக்குநன்மை பயக்கக்கூடிய திட்டங்களை அரசாங்கம் முன்வைக்குமாயின்

---

## விஸ்வரூபம்

இந்நிலையில் புதியஅரசுக்கு மீனவர்களின்நிலைமைகுறித்து சாத்வீகப்போராட்டம் நடத்துவதால் எதுவும் புரியப்போவது இல்லை.

எனவே அரசைச் சிந்திக்க வைக்கும் வகையிலும் எமது மக்களுக்கு பாதிப்புஏற்படாத வகையிலும் மீனவர்களின் போராட்டத்தை தொடர யாழ்குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் படையினருக்கான விநியோகத்தை தடுத்து அவர்களை முகாமுக்குள் முடக்கும் போராட்டத்தை நடத்துவதே சிறந்தவழியென கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இதேவேளை நாளை யாழ்குடாநாடுதழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனைஅடுத்து மினவர்களின் கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காதுவிடின் படைகளை முடக்கும் போராட்டம் வெடிக்குமென்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்துக்கு 47 மனிதஉரிமை அமைப்புக்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுஅமைப்புக்கள் ஆதரவுவழங்க முன்வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-10-19)

சித்தமாக உள்ளது.

மக்களினதும் நாட்டினதும் பாதுகாப்பிற்காக அரசிற்கு அழுத்தத்தை கொடுக்க கட்சி தயாராகிவருகிற தெனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்கட்சித்தலைவராக தனது பெயரை பிரேரித்த ஜனாதிபதிக்கும். அதனை வழிமொழிந்த லக்ஷ்மன் கதிர்காமருக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இச்சந்திப்பில் கட்சியின் சிரேஷ்ர உறுப்பினர்களான மங்களசமரவீர சிறிபாலடிசில்வா உட்பட பலர் கலந்துகொள்ளவில்லையென்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-4)

# சட்டத்துறை மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக சட்டப்பீட மாணவர்கள் நேற்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில்ஈடுபட்டனர்

சட்டத்துறையில் கல்வி பயிலும் ஒன்பது மாணவர்களை விரிவுரைக்கு சமூகம் அளிக்கவேண்டாம் என விதிக்கப்பட்ட தடையை எதிர்த்தே இச்சத்தியாக்கிரக போராட்டம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் சட்டதிட்டங்களுக்கு முரணாக செயற்பட்டமையாலேயே அவர்கள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகபதில்துணைவேந்தர் பேராசிரியர் லலிதா மேரிஸ் தெரிவித்துள்ளார். (ந-4)

காவல் அரண் அமைப்புக்களும் படை மாற்றங்களும் சோதனை கெடுபிடிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை அனுபவபூர்வமாகவேஅறிந்து கொண்டிருக்கின்றோம்.

சிறிலங்கா கடற்படைக்கும் புதிய படைச் சேர்ப்புக்கள் நவீனரக அதிவேக கடற்படைக் கலன்கள், பல்குழல் பீரங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டு பலப்படுத்தப்படுகிறது.

இந்நிலையில் விடுதலைப் புலிகள் மட்டு - அம்பாறை மாவட்டங்களில் படைசேர்ப்பைத் தொடர்வதாகவும், சமாதான முயற்சிக்கு விரோதமாக செயற்படுவதாகவும் மத போதகர்கள் செய்தி ஊடகங்களுக்குச் செவ்வி வழங்குகின்றார்கள்.

நாங்கள் போராடுவதை வரலாற்றுக்கடமையாகவே கருதுகின்றோம். புலிகளின் படைபலம் அதிகரிக்கப்படுவது தமிழ்மக்கள் ஏமாற்றப்படாமல், அழிக்கப்படாமல், சமாதானமாக ஒற்றுமையாக வாழ்வதற்கான சூழ்நிலையைத்தக்க வைப்பதற்கான நடவடிக்கை என்பதை எம் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆதலால் சமாதானத்திற்காகப்பாடுபடும் பொதுநலத் தொண்டர்களே! அதிவணக்கத்துக்குரிய மதகுருக்களே;

உலக ஒழுங்கின் கட்டுப்பாட்டையும் மீறி பல நாடுகள் அணுகுண்டைத் தயாரித்தது மக்களை அழிப்பதற்காகஅல்ல தங்கள் பலத்தினால் சண்டையின்றிச்சமாதானமாக வாழ்வதற்கான நடவடிக்கை என்பதைப்புரிந்து கொள்ளுங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## செய்தித் துளிகள்

### பிரசவ விடுதியை ஆரம்பிக்குக

(இணுவில்)

இணுவில் மத்தியமருந்தகத்தில் பிரசவ விடுதியை ஆரம்பிக்குமாறு அப்பகுதிப் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இம் மருந்தகத்தில் ஏனைய வசதிகள் காணப்படுகின்ற போதிலும் பிரவச விடுதி இல்லாமை பெருங்குறையாக இருப்பதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-9)

### வாழைகளில் நோய்த் தாக்கம்

(உரும்பிராய்)

உரும்பிராய்ப் பகுதி வாழைகளைப்பீடித்துள்ள ஒரு புதுவகை நோயினால் வாழைக் குலைகளில் கரும்புள்ளி ஏற்பட்டு அதன்விலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவருவதாக அப்பகுதி வாழைச் செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-215)

### செயற்குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது பின் வருவோர் புதிய செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- எஸ். ரி. பத்மநாதன், செயலாளர்- க.சண்முகலிங்கம், பொருளாளர்- பொ. நடராசா, உபதலைவர்- கலாநிதி சு. மோகனதாஸ், உபகுழுத்தலைவர்கள்- த. பஞ்சலிங்கம், ம. கதிர்காமநாதன், ப. புஸ்பராசா, உபசெயலாளர்-சி.சதாசிவம் உபபொருளாளர்-சீ.வைகுந்தசாமி மற்றும் 12 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

### வறிய மாணவர்களுக்கு எழுது கருவி

(உரும்பிராய்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அக் கிராமத்தின் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசமாக எழுது கருவிகள் வழங்கப்பட்டன. (செ-215)

### மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 2.00 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் அதிபர் க. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்பிரதம விருந்தினராக யாழ்.தேசிய கல்வியியல்கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதனும், சிறப்புவிருந்தினராக வைத்திய கலாநிதி திருமதி ஜெயராணி மனோகரி பொன்னுத்துரையும் கலந்துகொளவர். (எ-9)

### அஞ்சல் வாக்காளர் விண்ணப்பங்கள் அனுப்பி வைப்பு

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குபிரதேச சபையால் அஞ்சல் வாக்காளர்விண்ணப்பங்கள்நேற்று முன்தினம்யாழ்.உதவிதெரிவு அத்தாட்சி அலுவலர், தேர்தல் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ. ரமேஷ்தெரிவித்துள்ளார். (செ-232)

### கல்வியியற்கல்லூரி மாணவர்களின் பெற்றோருக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி 2 ஆம் வருட மாணவர்களின் பெற்றோர்களுக்கான ஆலோசனைக் கூட்டமும் கலந்துரையாடலும் எதிர் வரும் 9ஆம் திகதிசனிக்கிழமை காலை 9.00மணிக்கு மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பீடாதிபதி தி. கமலநாதன் தெரிவித்துள்ளார். (எ-9)

### நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் அண்மையில் மறைந்த குரும்பசிட்டிக் கிராமத்தைச் சேர்ந்த அமரர்கள் மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினம்,ஆ-மகாதேவன், ஸ்ரீகந்தராஜா ஆகியோரின்நினைவு அஞ்சலிக் கூட்டம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரியில் மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ. சி. நடராஜா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாமனிதர் கலைஞானி நினைவுரையை மாமனிதர் கலைஞானி அருங்காட்சியாக இயக்குநர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தியும் அமரர் ஸ்ரீகந்தராஜா நினைவுரையை குரும்பசிட்டி நலனோன்பு நிலைய அங்கத்தவரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளருமான ரி.வி. கிருஷ்ணசாமியும்.

ஆ.மகாதேவன் நினைவுரையை பலாலி ஆசிரிய கலாசாலை உபஅதிபர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கமும் ஆற்றினர்.

வைபவத்தின் இறுதியில் அமரர்கள் நினைவாக பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (செ-106)

### துர் நாற்றம்

(உரும்பிராய்)

திருநெல்வேலிச்சந்தையில், வாழைக்குலை விற்கும் பகுதியில் கழிவுப் பொருட்கள் தேங்கியிருப்பதனால், மழை நேரங்களில் அதில் இருந்து துர்நாற்றம் வீசுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது. (உ-215)

### 150ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவுவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு அதிபர் ந. சிவராசா தலைமையில் வித்தியாலயத்தின் பிரார்த்தனை மண்டபத்தில்நடைபெறவுள்ளது. (எ-9)

### இன்று தடுப்பு முகாம் செல்வார்

(யாழ்ப்பணம்)

யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவின் அதிகாரி என்.ஜீவேஸ்வரா இன்று காங்கேசன் துறை கைதிகள் தடுப்பு முகாமிற்குச் செல்லவுள்ளார்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளுக்கு அவர்களின்உறவினர்களகொடுத்து விடும் கடிதங்கள் மற்றும் உடைகள் ஆகியவற்றை எடுத்துச் சென்று அவர்களிடம் கொடுப்பதோடு அவர்கள் உறவினர்களுக்கு கொடுக்கும் கடிதங்களை எடுத்து வருவார். (எ)

# மீனவர்களின் போராட்டத்திற்கு சகல வழியிலும் தோள் கொடுப்போம்

## தொ. நு. க. மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தங்களினால் மிகவும் மோசமான அழிவுகளை கண்டிருந்த கடற்றொழிலாளர்கள்மீது பலகாலமாகஅவர்கள தொழில் செய்யும் இடமான கடலில் இறங்க விடாமல் அரசாங்கம் தடுத்து வருகின்றது.இதன் காரணமாக கடற்றொழிலை நம்பிவாழும் இக்குடும்பங்கள் பட்டினிச் சாவை எதிர் நோக்க வேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் நாளை நடத்த இருக்கும் பூரண கதவடைப்புக்கு ஆதரவு தெரிவித்துயாழ்.தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தேவை ஏற்படின் கடற்றொழிலாளர்களால் முன்னெடுக்கப்படும் இப்போராட்டங்களுக்கு சகல வழிகளிலும் தோள கொடுக்க தாம் தயாராக உள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆட்சிமாறியும்கூட இவர்களின் பிரச்சினைக்கு இது வரை தீர்வு கிடைக்கவில்லை.இந்நிலையில் அன்றாடம் கடலையே நம்பி வாழும் இக்குடும்பங்கள் கடந்தவாரம் முதல் யாழ். செயலகத்தை முற்றுகையிட்டு வழிமறிப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். இதன் இரண்டாவது கட்டமாகவே நாளையாழ்.குடாநாடுமுழுவதும்பூரண கடை அடைப்புக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

இந்நிலையில்பொதுஅமைப்புக்கள,மனிதநேய அமைப்புகள் என தமிழ் சமூகமமுழுவதும் இக்கடை டைப்புக்கு ஆதரவு தெரிவித்து இவர்களின் போராட்டம் வெற்றி அளிக்க செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

இதேவேளை அரசாங்கமானது,

- உடனடியாக கடல்வலய தடையை நீக்கவேண்டும்.
- குடாநாட்டின் சகல கடற் பகுதிகளிலும் மீனவர்கள் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும்.
- குடாநாட்டில் மீனவர்கள் பாரம்பரியமாக தொழில் செய்து வரும்கடற்பகுதிகளை இராணுவத்தினரின் பாதுகாப்பை காரணம்காட்டி தடுக்க முயற்சிப்பதைஉடனடியாக நிறுத்த வேண்டும்.
- மீனவர்கள் சகல நேரத்திலும் விசைப்படகுகளில் பயணம் செய்து ஆழ்கடலிலும் தொழில் செய்ய அனுமதிக்க வேண்டும் எனகேட்டுக்கொள்கிறோம் என்றுள்ளது. (உ)

### நினைவுப் பரிசில் நிதியம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் அமரர் ஆறுமுகம் மகாதேவன் நினைவு பரிசில்நிதியம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்நிதியத்திற்கு 75 ஆயிரம் ரூபா சேர்ந்துள்ளது.

இந்நிதியம்மூலம்ஒவ்வொரு வருடமும் க.பொ.த. (உ-த) பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் கணித விஞ்ஞானப் பிரிவுகளில் அதி கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு இந்நினைவுப் பரிசில் வழங்கப்படவுள்ளதாகவும் மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் தலைவர் குரும்பசிட்டி கிராமஅபிவிருத்திச் சங்கம் உரும்பிராய்என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் மேற்படி சங்கத்தலைவர் ஆ. சி. நடராஜா தெரிவித்துள்ளார். (உ-106)

# சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு 90 பேரை ஏற்றிச் சென்ற படகை கடற்படையினர் கைப்பற்றினர்

(கொழும்பு)

வெளிநாட்டுக்கு சட்டவிரோதமாக90இலங்கையரை ஏற்றிக் கொண்டு சென்ற படகு ஒன்றை நேற்று அதிகாலை பேருவல கடற் பகுதியில் வைத்து கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்தப்படகில் இருந்த அனைவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தென்பகுதிக்கு பொறுப்பான ஆணையிடல் அதிகாரி உபாலி ரணவீர தெரிவித்துள்ளார்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவலொன்றை அடுத்து பேருவல கடற் பகுதியில் தீவிரதேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது இந்தப்படகு நேற்றிரவு 2 மணியளவில் கைப்பற்றப்பட்டதாகவும் அப்படகுகாலி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை,சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்ல முயன்ற 6 பேரை கிக்கடுவ பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

இவர்களை ஏற்றிச் சென்ற படகுஅனைவரையும் கிக்கடுவ துறைகமுகத்திற்கு அருகில் கைவிட்டுச் சென்றதாகவும் கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று கிக்கடுவ மஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் கிக்கடுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி செனத் பண்டார தெரிவித்துள்ளார். உ-5)

# மீனவர் பிரச்சினைக்கு முடிவு காண்பது அவசியம்

## யாழ் மறை மாவட்ட ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமது நிரந்தர விடிவிற்கு கடற்றொழிலாளர்களகிளர்ந்தெழுந்து தம் உரிமைகள்-மாண்பிற்காக போராட துணிந்து விட்டார்கள், விடிவு கிட்டும் வரை தொடர்ச்சியானபோராட்டத்தில்குதித்து விட்டார்கள். கொட்டும் மழையில் தங்கள் உரிமைக் குரலை ஒலிக்கச் செய்கிறார்கள். நிவாரணத்தில் தங்கள் வயிற்றை நிரப்ப விரும்பாமல் தொழில் உரிமையை பெற பட்டினி கிடக்க தயாராகி விட்டார்கள்.

இவர்களது நீதியான போராட்டத்திற்கு யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள்ஒன்றியம் ஒத்துழைப்பையும் இவ் உரிமைப் போராட்டத்திற்கு தோழமையையும் மீனவர்களின் அன்றாட வாழ்வியல் பிரச்சினைக்கான நிரந்தர தீர்விற்கு இறையாசீரையும் வேண்டி நிற்கின்றது

இவ்வாறு மேற்படி ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் இக்குடாநாட்டில் நிலைகொண்டுள்ள அரச இராணுவத்தின் பாதுகாப்புக் கருதி 12ஆண்டுகளுக்கு மேலாக கடற்றொழிலாளர் சுதந்திரமாக தம் தொழிலை மேற்கொள்ள அனுமதிக்கப்படவில்லை. இராணுவத்தின் பாதுகாப்புஒன்றிற்காக இங்கு வாழ் மக்களின் பாதுகாப்பு, தொழில், வாழ்வியல் உரிமைகள அனைத்தும்தாரை வார்த்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது.

அதன் விளைவு பரிதாபம்! இதனால் அதிமோசமாக பாதிக்கப்படுபவர்கள் மீனவர்கள். கடல் வலய கட்டுப்பாட்டு ஒழுங்கு மீனவர்கள் வாழ்வுஇயக்கத்தை வேரோட்டமாக அழிக்கிறது. வாழ்விட உரிமைகளைப் பறிக்கிறது. மனித மாண்பினை சிதைக்கிறது.

திக்கம் தொடக்கம் தொண்டைமனாறு ஈறாக கடந்த ஆறுமாத காலமாக முற்று முழுதாக தடை செய்யப்பட்டுள்ளார்கள். ஓர் சில இடங்களில் சில மணித்தியாலங்கள் மட்டும் தொழில் செய்யவும் அதுவும் இராணுவத்தின் கருணை இரக்கத்திற்கும் மண்டியிட வேண்டிய நிலை!

இதனால் வாழ்வின் விரக்தியின் விளிம்பிற்கும் தள்ளப்பட்டு தற்கொலை செய்ய முற்படும் மீனவர்களுக்கும் தங்களிடமுள்ள மீன்பிடி உபகரணங்களை விற்று, முடிவில் பிச்சையெடுக்கும் பெற்றோர்களுக்கும் பாடசாலை செல்ல முடியாமல் வீதியில் அலையும் மீனவச் சிறார்க்கும் ஒருநல்ல முடிவு எட்டுவது அவசியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

### வறிய மாணவர்களுக்கு எழுது கருவிகள்

(உரும்பிராய்)

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகம், உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயத்தைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு இலவசமாக எழுது கருவிகளை வழங்கியுள்ளது.

இவ் லயன்ஸ் கழகம் முன்பும் இருதடவைகள் இப்பாடசாலைக்கு இலவசமாக உபகரணங்கள் வழங்கியதாக அதிபர் க. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்- (செ-215)

# நாகரிகத்தின் சின்னமாகிய யாழ்ப்பாணம்

# அரசியல் சூழ்நிலையினால் சீரழிந்து போனது

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இசைவாணனான யாழ்பாடி என்பவனுக்கு அவனது திறமையைப் பாராட்டி ஒரு மன்னனால் அளிக்கப்பட்ட ஒரு மணற்திடர்தான் இன்றைய யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்து அரசியல் வரலாறு அந்நியர்களின் அத்து மீறல்களினால் தொடர்பற்றும் ஆங்காங்கே சிதறியும் காணப்படுகிறது; எனினும் கலாசார வரலாறு நிலையானதாக இருந்து வருகின்றது. பண்டைய யாழ்ப்பாணத் தமிழர்கள் கடலோடிகளாக இருந்தனர். கடல்வர்த்தகமும் நன்றாக நடைபெற்றது. கடலால் சூழப்பட்டிருப்பதனால் துறைமுகங்கள் பல பண்டைய காலத்திலிருந்தே இயங்கிவந்தன.

தமிழ் நாட்டுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே தினமும் நடைபெற்று வந்த கப்பல் சேவை (இந்தக் கப்பல்களை வள்ளம் என்பர்) பருத்தித்துறை என்னும் துறை முகத்தினூடாக நடைபெற்றது. பருத்தித்துறையில் அக்காலத்தில் தமிழ் நாட்டுப் பொருட்களைப் பாதுகாத்து வைக்க அமைக்கப்பட்ட கோட்டைகள்போன்ற பண்டசாலைகள் இன்னும் நாம் காணலாம். இதனைக் கிட்டங்கிகள் என அழைப்பர். இந்தியத் தமிழர்களின் யாழ்ப்பாணத் தொடர்பை எடுத்துக்காட்டுவதாக இருக்கும் ஊர்ப்பெயர்கள் பல உண்டு. திண்ணைவேலி (திருநெல்வேலி), நாகர் கோவில், தொண்டைமான் ஆறு போன்றவை இன்றும் வழக்கிலுள்ள பெயர்கள்.

தொண்டைமண்டலத்து மன்னர்களின் பரம்பரையில் வந்த கருணாகரத் தொண்டைமான் என்பவர் யாழ்ப்பாணத்தில் உப்பை விளைவித்துத் தமிழ் நாட்டுக்கு ஏற்றிவந்தார். உப்பை விளைவித்து கடல் வழியே கொண்டுவருவதற்கு வசதியாகக் கடலுடன் சேர்ந்தஒரு நீரிணையை ஏற்படுத்தினார். அந்த நீரிணை இன்றும் தொண்டைமானாறு என அழைக்கப்படுகிறது, அந்த மன்னரால் அமைக்கப்பட்ட (நிறுவப்பட்ட) கோவில் இன்றும் புகழ்பெற்று விளங்குகின்றது. நாகர் கோவில் என்ற இடம் தமிழ் நாட்டு நாகர்கோவிலுடன் தொடர்புடையது. இங்கிருந்து கப்பலில் சென்றவர்கள் கரையேறிய இடத்தில், சித்திரா பௌர்ணமியின் போது இன்றும் கப்பல் திருவிழா என்னும் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

மூன்று வர்த்தகர்கள்

யாழ்ப்பாணத்துப் பூர்வீச வரலாற்றை எழுதிய ஒரு பெண்எழுத்தாளரான யோகா பாலச்சந்திரன் என்பவர்கீழ்க்கண்டவாறுகுறிப்பிடுகிறார். ''கிறிஸ்து சகாப்தத்திற்கு முன்பே யாழ்ப்பாணத் தமிழர்கள் வர்த்தக நோக்கில் உலகம் முழுவதும் சென்று வந்ததற்கு ஆதாரம் உண்டு. இயேசு கிறிஸ்து பிறந்த நாளின் போது கீழ்த்திசையிலிருந்து மூன்று வர்த்தகர்கள் பெத்லஹேம் நகரை நோக்கி வந்ததாக வரலாறு தெரிவிக்கிறது. அன்றைய காலகட்டத்தில் கீழைத்தேய நாடுகளில் பாரதமும் இலங்கையுமே உலகம் சுற்றி வாணிபம் செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சீனர்கள் கடலில் சுற்றினார்களே தவிர பாலைவனங்களைக் கடக்க விரும்பவில்லை. மேற் குறிப்பிட்ட மூன்று வர்த்தகர்களில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவேலுப்பிள்ளை யாவார்'' என்கிறார் இவர்.

பாக்குநீரிணையில் பாதை

இவரது கூற்றை வரலாற்றாசிரியர்கள் மறுப்பதற்கில்லை. இலங்கையும்இந்தியாவும் இன்றுள்ளதைப் போல முற்காலத்தில் கடலால் பிரிக்கப்படவில்லை. இரண்டு மாட்டுவண்டிகள் போய்வரக் கூடிய, கற்களால் அமைக்கப்பட்ட பாதைஒன்று இரு நாடுகளையும் இணைத்தது. 1957ல் பாக்குநீரிணையின் மேலாகப் பறந்த ஒரு பயிற்சி விமானி கடலில் நீளமாக ஒரு பாதை தெரிந்ததாகக் கூறினார். சித்திரை மாதங்களில் கடல் வற்றிய போதெல்லாம் அந்தப் பாதை எல்லோராலும் பார்க்கக் கூடியதாக இருந்தது. இன்றும் கூடப் பெரிய கப்பல்கள் இந்த நீரிணையில் போகாதது இந்தக் காரணத்தால் தான்.

வெள்ளையர்களின்வரவால் கீழைத்தேய நாடுகளில் அதிக நன்மையைப் பெற்றது யாழ்ப்பாணம். முதல் அச்சியந்திரம், முதல் ஆங்கிலக் கல்வி என்று எல்லாவற்றையும் வெள்ளையர் தமிழ் நாட்டில் காலூன்றுவதற்கு முன்னரேயே யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தினார்கள். யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர் என்னும் அறிஞர் பைபிளை முதலில் தமிழில்மொழி பெயர்த்து வைத்தார். வெள்ளையரின் வரவால் பயனடைந்த யாழ்ப்பாணத்து மக்கள் சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே ஆங்கிலக் கல்வியின் துணையுடன் வெளிநாடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தார்கள். இது அவர்களது வாழ்க்நிலையை உயர்த்தியது. தூய கலப்பட மற்ற தமிழை யாழ்ப்பாணத்தைத் தவிர வேறு எங்குமே காண முடியாது. அவற்றில் சில வார்த்தைகள் இவை. ஒழுங்கை- சிறிய வீதி (லேன்). நிரை வரிசை (க்யூ), வடலி- சிறிய பனை மரம், படலை பனை ஓலையினால் செய்யப்பட்ட கதவு, உள்ளி- வெள்ளைப் பூண்டு, மிகப் பழமையான கலாசார பின்னணியைக் கொண்டதோடு நாகரிகமாக விளங்கிய யாழ்ப்பாணம் இன்று அரசியல் சூறாவளியினால் நிலை குலைந்து போயிருக்கிறது.

மீண்டும் ஒரு பொற் காலம் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதற்குக் கீழ்க் கண்ட கருத்து சொல்லப்படுகிறது. ''யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறி மேலைநாடுகளில் குடியேறிய தமிழர்கள் ஒன்றுதிரண்டால் ஒரே நாளில் கோடிக்கணக்கான டொலர்களை சேர்க்க முடியும். ஒரு சிறிய வளம் மிக்க நாட்டை உருவாக்க இந்தப் பணம்போதுமானது. ★

நன்றி
தினபூமி

# நாட்டில் சமாதானம் மலர முடியுமென்ற

# நம்பிக்கையை அரசு ஏற்படுத்த வேண்டும்

## நூல் வெளியீட்டில் அமைச்சர் பீரிஸ்

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை மலரச் செய்ய வேண்டுமானால் அரசு சமாதானத்தைக் கொண்டு வரும் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும்.

டெயிலி நியூஸ் பத்திரிகையின் உதவி செய்தி ஆசிரியர் ரங்க கலாசூரியஎழுதிய 'எல்.ரி.ரி.யும், ஐ.ஆர்.ஏயும்,பயங்கரவாதத்திற்கு எதிரான போரும் அமைதிக்கான கலந்துரையாடலும்' என்ற நூலின் வெளியீட்டு விழாவில் அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் நடைபெற்ற போது அவர் மேலும் கூறியதாவது,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளர்களையும், மதத்தலைவர்களையும் சந்தித்து அரசாங்கம் சரியாகச் செயற்படுகின்றதா அல்லது தவறு விடுகின்றதா என்பது குறித்துஅவர்களுடன் ஆலோசனை செய்து வருகின்றார்.

இவை மக்கள் மத்தியில் சமாதானம் குறித்து நம்பிக்கையை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளாகும்.

மக்கள மத்தியில் ஏற்படும் நம்பிக்கையை அடிப்படையாக வைத்து தீர்வுத் திட்டமொன்றைத்தயாரிக்க வேண்டும்.

பின்பு அதனை அனைத்துக் கட்சிகளின்ஆதரவுடன் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில், நாம் இப்போது வடபகுதி மக்களுக்கும் தென்பகுதி மக்களுக்கும் இடையே உறவுப் பாலம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறோம். தென்பகுதியைச் சேர்ந்தவர்த்தகர் குழுவொன்று இதன் அடிப்படையில் வட பகுதிக்குச் சென்று அங்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்களை தென் பகுதியில் சந்தைப் படுத்துவது பற்றி ஆராய்ந்துள்ளது.

மக்கள மத்தியில் அமைதியை ஏற்படுத்தினால் அவர்கள் மீண்டும் அதிலிருந்து பின் வாங்கமாட்டார்கள். அதற்காக எமது அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

கப்பல் துறை, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேசுகையில் இனங்களிடையே பாகுபாடு காட்டப்படுவதே உள் நாட்டு யுத்தங்களுக்கான காரணம் என்று குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரியும் இவ் விழாவில் உரை நிகழ்த்தினார். (எ)

## இனமத மொழி பேதம்கடந்து நாட்டுக்காக உயிர்நீத்த அனைவருக்கும் அஞ்சலி

(கோப்பாய்)

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் இலங்கையின் 54 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் தேசியக் கொடியை கோப்பாய் பொலிஸ் நிலைய அதிகாரி பேனட் டி சில்வா ஏற்றி வைத்தார்.

150 இற்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்துகொண்ட இந்நிகழ்வில் நாட்டுக்காக உயிர்நீத்த தமிழ், சிங்கள, முஸ்லிம்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பொலிஸ் நிலைய அதிகாரி உரையாற்றுகையில், இந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலமே நாட்டுக்காக உயிர்நீத்த அனைவரினதும் ஆத்மா சாந்தியடையும்.

இதற்காக அனைவரும் இந்த நாளில் தத்தம் தெய்வங்களை வேண்டுவது அவசியம் என்று குறிப்பிட்டார். (உ-9)

## விழிப்புக் குழுக்கள் செயலிழப்பு திருட்டுக் குழுக்கள் விழிப்பு

(மந்திகை)

வடமராட்சிப் பகுதியில் மீண்டும் திருட்டு கொலை, கொள்ளைச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்று வருவது குறித்து அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதி நிலவுவதுடன், இரவுவேளைகளில் நடமாடவும் அச்சம் தெரிவித்து வருவதாக கூறப்படுகின்றது.

இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்க்கும் வகையில் இப்பகுதி இளைஞர்களால் பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் அனுசரணையுடன் அமைக்கப்பட்டு திறம்படச் செயற்பட்டுவந்த விழிப்புக்குழுக்கள் செயலிழந்ததைத் தொடர்ந்தே இந்நிலை ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை, மீண்டும் விழிப்புக்குழுக்களை அமைத்து செயற்படுத்துவது குறித்தும் பலதரப்பினாலும் ஆராயப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது (உ-23)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி இன்றுபி.ப.1.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் செ. சிவநடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உடுவில் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும், சிறப்புவிருந்தினர்களாக ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் திருமதி கனகமணி கந்தசாமி, திருமதி தங்கரத்தினம் செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-206)

## படையினர் சிரமதானம்

(மந்திகை)

இலங்கையின் 54-வது சுதந்திர தினமான நேற்று முன்தினம் பருத்தித்துறையிலுள்ள படையினரால் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிரமதானம் செய்யப்பட்டது.

இச் சிரமதானப் பணியில் நூற்றுக்கணக்கான படையினர் ஈடுபட்டனர். (செ-23)

## ரூபெல்லா தடுப்பூசி

(ஊர்காவற்றுறை)

வேலணைப் பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகரின்ஏற்பாட்டில் யா-வேலணை கிழக்கு மகாவித்தியாலயம், யா-மண்கும்பான் அ.த.க பாடசாலை, யா-வேலணை செட்டிப்புலம் அ.த.க பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களுக்கு அண்மையில் ரூபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்டது. (உ-75)

## சைக்கிள் திருட்டு

(மந்திகை)

மழை பெய்து கொண்டிருந்த வேளை வீட்டு வாசலில் நின்ற சைக்கிளை திருடர்அபகரித்துச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம்அல்வாய் தெற்கில் இடம் பெற்றுள்ளது.

இத் திருட்டுக்குறித்து நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (செ-23)

பட்டம் வழங்கி

## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதிதவத்திரு மயில்வாகனம் சுவாமிகளின் ஆன்மார்த்த சீடனும் சந்நிதியான் ஆச்சிரம மூலகர்த்தாவாகவும் விளங்கும் செ. மோகனதாஸ் சுவாமிகளுக்கு சைவத் தமிழர்கள் சார்பில் பிரம்மஸ்ரீகாரை கு.சிவராஜ சர்மா ''அமுதகலா ஜோதி'' எனும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்துள்ளார்.

இக் கௌரவிப்பு வைபவம் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஐந்தாம் ஆண்டு ஞானச் சுடர் வெளியீட்டு விழாவின் போது இடம் பெற்றது. (செ-106)

## இன்று ஒரு தகவல்

### கடமைக்கே பாராட்டு

ஒருமுறை பேரரசன் ஒருவன் தலைநகரிலிருந்து வெகு தொலைவிலுள்ள நகருக்கு வந்திருந்தான். அரசனைக் காணவேண்டும், அவனிடம் நன்மதிப்புப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் நகர மக்கள் எல்லோரும் அரசன் தங்கியிருந்த மாளிகையின் முன் குழுமியிருந்தார்கள். விழித்தெழுந்த அரசன் கூடியிருந்த பெரும் சனக்கூட்டத்தை யன்னல் வழியாகப் பார்த்தான். நகர மக்களின் எண்ணம் அவனுக்குப் புரிந்தது. அம்மாளிகையின் பின் பக்கக் கதவைத்திறந்து அந்நகரை விட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறினான் அரசன்.

நகர வீதிகளில் ஆள் நடமாட்டமே இல்லை. வயல் வெளிகளில் எந்த வேலையும் நடைபெறவில்லை. ஒரேஒரு கிழவன் மட்டும் தன்னந்தனியாகத் தன்வயலில் உழுது கொண்டிருந்தான். அவனிடம் வந்த அரசன், நான் இந்நாட்டு மன்னன். என்னைக் காண்பதற்காக எல்லோரும் மாளிகை வாயிலில் கூடியிருக்கிறார்கள். நீ மட்டுமே கடமையைச் செய்து கொண்டிருக்கிறாய். இந்தப் பொற்காசுகளைப் பரிசாகப் பெற்றுக் கொள். மன்னனிடம் பாராட்டுப் பெறவேண்டுமென்றால் கடமையைச் செய்தே பெறவேண்டும். நான் கடமையைச் செய்து கொண்டிருந்ததால் அரசரின் பாராட்டும் பரிசும் கிடைத்தன என்று நகர மக்களுக்கெல்லாம் சொல் என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். □

பேராசிரியர் எ. சோதி

# பிரதமரின் சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு

### இதுவே முதற்பணி என்கிறார் எதிர்க்கட்சியின் புதிய தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட சமாதான முயற்சிகள் யாவும் வெற்றியடைவதே எமது விருப்பமாகும்.

இவ்வாறான சமாதான முயற்சிகளுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு எதிர்க்கட்சிஉறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் என தான் உறுதி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்ற பின்னர் தான் செய்யும் முதல்பணி17 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கு அமைவாக சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி சமாதானத்தைமுன்னெடுத்து செல்ல பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுக்கு உதவி செய்வது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## காணி அன்பளிப்பு

(ஊர்காவற்றுறை)

யா/ நாரந்தனை தெற்கு றோ.க.த.க. பாடசாலைக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரால் அண்மையில் காணி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. (உ-75)

## இறைச்சிக்காக பசுக்கன்றுகள் கொலை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பகுதியில் இறைச்சிக்காக பசுக்கன்றுகள் வெட்டப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் இயங்கும் இறைச்சிக் கடைகளில் ஒரு வயது கூட நிரம்பாத பசுக்கன்றுகளும் இறைச்சிக்காக கொல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (செ-75)

## விழிப்புக்குழு அமைப்பு

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவு கிழக்கில் அதிகரித்து வரும் திருட்டைத் தடுக்கும் வகையில் அண்மையில் அப்பகுதி இளைஞர்கள் ஒன்றிணைந்து விழிப்புக்குழு ஒன்றினை அமைத்துள்ளனர். (உ-75)

## சத்துணவு பொதி வழங்கப்பட்டது

(ஊர்காவற்றுறை)

மண்டைதீவுப் பகுதியில் கர்ப்பிணித் தாய்மார் மற்றும் நிறைகுறைந்த குழந்தைகளுக்கான ''கோர்ன் சோயா'' சத்துணவுப் பொதி அண்மையில் வழங்கப்பட்டது.

திரிபோஷா மாவிற்குப் பதிலாகவே இச் சத்துணவுப் பொதி வழங்கப்பட்டுள்ளது. (செ-75)

## எதிர்க் கட்சித் தலைவராக ராஜபக்ஷ

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவருக்கான நியமனக்கடிதத்தை ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம்வழங்கியுள்ளார். (வ)

## விண்ணப்பம் கோரல்

மருத்துவ உத்தியோகத்தர்கள் (ஆரம்பதரம்) மற்றும் பல் வைத்திய உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கான வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை இம்மாதம் முதலாம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானியில் பார்வையிடலாம். (உ-3)

# வறிய மாணவர்களுக்கு இலவச கணனிப்பயிற்சி

(இணுவில்)

இணுவில் பொது நூலகத்தில், வசதிகுறைந்த மாணவர்களுக்கு இலவச கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி பொது நூலகத்திற்கு இணுவிலைச்சேர்ந்த கொழும்பிலுள்ள வர்த்தகர்கள் 5 கணனிகளையும் யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் க. தேவராஜாவின் ஏற்பாட்டில் 5 கணனிகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கொண்டே மேற்படி கணனிப்பயிற்சி நெறி நடத்தப்படவுள்ளது. (உ-49)

## நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நாய்த் தடுப்பூசி வழங்கும் பணியில் இன்று காலை 8.30-மு.ப. 10.30 மணிவரை குருசோ வீதி கிறன்பல்ட் சனசமூக நிலையத்திலும் மு.ப. 11.00 பி.ப 1.00 மணிவரை டேவிட் வீதி சென். செபஸ்தியன் சனசமூக நிலையத்திலும் பி.ப. 2.30-பி.ப 4.30 மணி வரை மடத்தடி யூபிலிமகப்பேற்று நிலையத்திலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (செ)

## சிதறிக் கிடக்கும் தளபாடங்களை ஒன்று சேர்க்குக

(அல்லாரை)

யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியை சொந்த இடத்தில் இயக்குவதற்கு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றமையால்,

ஆங்காங்கே வீடுகளிலும், வீதிகளிலும் சிதறிக் காணப்படும் மேற்படி பாடசாலையின் தளபாடங்களை இனம் கண்டு பாடசாலையில்ஒப்படைக்குமாறு பாடசாலைச் சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது. (உ-210)

## கூரைகள் பொருத்தல்

(இணுவில்)

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக கூரைகளற்ற நிலையில் காணப்பட்ட உடுவில் ஆலடி பொதுச் சந்தைக் கட்டடங்களுக்கு வலி தெற்கு பிரதேச சபையினால் தற்போது கூரைகள் பொருத்தப்பட்டுள்ளன. (உ-49)

# கொள்ளைகளில் ஈடுபட்ட இராணுவத்தினர் கைது

(கொழும்பு)

கொழும்பு நகரில் நீண்டகாலமாக கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட இராணுவக்கப்டன் உட்பட இரு இராணுவ அதிகாரிகளையும் ஒரு தபால் ஊழியரையும் விசேட பொலிஸ் பிரிவினர் கடந்த சனியன்று காலை கைதுசெய்துள்ளனர்.

கிருலப்பனை முகாமைச் சேர்ந்த மேற்படி இராணுவத்தினர் கொழும்பு, கொள்ளுப்பிட்டி, வெள்ளவத்தை, கல்கிசை ஆகிய இடங்களிலுள்ள கடைகள் மற்றும் வீடுகளை சோதனையிட வேண்டுமெனக் கூறி அங்கு பெறுமதி மிக்க செலூலர் போன்கள், மோட்டார் சைக்கிள்கள், கார் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

சுமார் 28 கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்ட இவ் இராணுவக்குழுவினர் இதுவரை மூன்று மில்லியன் ரூபா பணத்தையும் திருடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தற்போது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (உ-4)

## 10 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடம்

(கொழும்பு)

நாடுமுழுவதிலுமுள்ள பாடசாலைகளுக்கு 10 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பதவி வெற்றிடம் உள்ளதாக கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், அழகியற்கலை ஆகிய பாடங்களுக்கான வெற்றிடங்களே அதிகமாக உள்ளன.

இவை குறிப்பாக வடக்கு - கிழக்கு மத்திய ஊவா வடமேல் மாகாணங்களிலேயே அதிகமாகஉள்ளதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

# காங்கிரஸ் குமரகுருபரன் பிரதமருக்கு கடிதம்

(கொழும்பு)

யாழ். குடாநாட்டு மீனவ சமூகத்தின் இன்றைய நிலை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளர் கலாநிதி என். குமரகுருபரன் கடிதம் எழுதியுள்ளார்.

யாழ். குடாநாட்டு மீனவர்களின் பிரச்சினை குறித்து தற்துணிவுடன் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டு மீனவர்கள் கடந்தஒரு வாரகாலமாக யாழ். செயலகத்தின் முன் மறியற்போராட்டம் ஒன்றை மேற்கொண்டுவருகின்றனர்.

இவர்களது மறியற் போராட்டம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சரோ புனர்வாழ்வு அமைச்சரோ, எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அனாவசியமான காலதாமதத்தை ஏற்படுத்தி வருகின்றனர்.

இந் நிலையில் தாங்கள் பிரதமர் என்றவகையில் இப்பிரச்சினைத் தீர்வுக்கு நடவடிக்கை எடுத்து தற்துணிவுடன் செயலாற்ற வேண்டுமென்றும் குமரகுருபரன் கேட்டுள்ளார். (வ)

## தையல் போதனாசிரியர்கள் யாழ். வருகை

(ஊர்காவற்றுறை)

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்தில்நடத்தப்படும் தையல் பயிற்சிநிலையங்களைப் பார்வையிடுவதற்காக, திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இரண்டு தையல் போதனாசிரியர்கள் வந்துள்ளனர்.

திருகோணமலை கிராம அபிவிருத்தித் திணைக்களத் தையல் போதனாசிரியர் திருமதி ரஞ்சினிபாலகிருஷ்ணன், திருகோணமலை கிராம அபிவிருத்தித்திணைக்களமாதிரிப் பயிற்சி நிலைய தையல் போதனாசிரியர் செல்வி ஆழ்வார்பிள்ளை பவானி ஆகியோரே இங்கு வருகை தந்துள்ளனர். (செ)

# மீனவர் போராட்டத்திற்கு ஆதரவுதெரிவித்து அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில்வாழும் மீனவர்கள் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய தொழிலைச் செய்து கொள்வதற்கு பலவிதமான இடைஞ்சல்களும், தடைகளும் ஏற்பட்டிருப்பது மனவருத்தத்திற்கு உரிய தொன்றாகும்.

இதனால் இம்மக்கள் 1990 ஆம் ஆண்டிலிருந்து சொல்லொணாத் துன்பங்களையும், துயரங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும்எதிர்கொண்டுள்ளனர். இம்மீனவக் குடும்பங்கள் வறுமையால் பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

மீனவர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு விடுத்த அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மீனவர்களின் நியாயமான கோரிக்கைகளை காலந்தாழ்த்தாது அரசு பரிசீலித்து, அவர்களின் துன்பங்களுக்கு விடிவு ஏற்படக்கூடிய ஓர் நல்ல தீர்வை அறிவிக்கவேண்டும் என்று யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு அரசைக் கோருகிறது என மேலும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

# உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட ஜனாதிபதியிடம் அனுமதி

(யாழ்ப்பாணம்)

இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி போட்டியிடுவது தொடர்பாக, அமைப்பாளர் வேல்முருகு தங்கராசா இன்று ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை சந்தித்துப் பேசி அனுமதி பெறவுள்ளார்.

அனுமதி கிடைத்ததும் யாழ்.வந்து அது தொடர்பான அலுவல்களில் ஈடுபடவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர் ரி.தேவகுல நாயகம் தெரிவித்தார். (உ)

## சிந்தனைக்கு விருந்து

### கன்னனது மாண்பு

ஆரென் றறியா அநாதை யாம் கன்னனுக்குச்
சீரும் திருவும் தெரிந்தளித்த - சீரியற்காய்ப்
பாண்டவருக் கண்ணனெனப் பின்னறிந்தபோதினிலும்
மாண்டது கன்னனது மாண்பு.

'பழையவன்'

## உடன்பாடு எட்டப்படவில்லை

(நீலகிரி)

தமிழகத்தேயிலைத்தோட்ட தொழிலாளர் சம்பளத்தைக் குறைப்பது தொடர்பாக நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்குமிடையில்நேற்று முன்தினம் இப்பேச்சுவார்த்தை இடம் பெற்றது. (து)

### அமெரிக்கத் தாக்குதலின் எதிரொலி

# ஆப்கானில் என்றுமில்லாத உணவுப் பஞ்சம்

# பட்டினியால் மக்கள் உயிர் துறக்கும் அவலம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள உணவுப்பஞ்சம் காரணமாக பலர் உயிரை கையில் பிடித்தவாறு இருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆப்கானிஸ்தானின் ஹெரஸ் நகருக்கு கிழக்குப் பகுதியில் பலர் பட்டினியால் நாளாந்தம் உயிர்துறக்கும் அவலம் நீண்டுகொண்டு செல்வதுடன்,

ஹெரஸ் நகரின் கிழக்குப் பகுதியில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவர் பசியினாலோ அல்லது பசிதொடர்பான நோயினாலோ உயிரிழந்திருப்பதாக அங்கு சென்று திரும்பிய பி. பி. சி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அப்பாவிப் பெண்கள் சமைப்பதற்கு எரிபொருட்கள் இல்லாத காரணத்தால் பசும்புல்லை உணவாக உட்கொள்ளும் காட்சி மனதை நெருடுவதாகவும்,

உணவு உதவிகள் அண்மைக் காலமாக கிடைத்து வருகின்றபோதும் அந்த உணவுப் பொருட்களை அவர்கள் உடனடியாக உள்ளூர் வியாபாரிகளிடம் கையளித்து தாம் பட்ட கடன்களை அடைத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அதற்குக் காரணம் இதுவரை காலமும் அந்த வியாபாரிகளிடம் கடனாக உணவுப்பொருட்களைப் பெற்றமைதான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பசியின் கொடூரம் காரணமாக 10 ஆயிரம்பேர் இறக்கும் தறுவாயில் இருப்பதாகவும் கடந்த மூன்று வருடகாலத்தில் ஏற்பட்ட வரட்சியினால் பல குடும்பங்கள் கூண்டோடு அழிந்து விட்டதாகவும், அவர்களின் வீடுகள் யாருமற்ற பேய்வீடுகள்போல் காட்சியளிப்பதாகவும் தற்போது உணவு உதவிகளை நம்பி 50 இலட்சம்பேர் அங்கு வாழ்ந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

# நைஜீரியாவில் இனக் கலவரம்

# நூற்றுக்கணக்கினர் படுகொலை

(லாகோஸ்)

நைஜீரியாவின் தலைநகரான லாகோஸில் மூண்ட இனக்கலவரம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹெளஸாமற்றும்யோருபா ஆகிய இன ஆண்கள் இருவரிடையே ஏற்பட்ட வாக்குவாதமே இனக்கலவரமாக மாறியதாக கூறப்படுகிறது.

கலவரங்கள் இடம் பெற்ற முஸ்லிம் மாவட்டங்களில் தற்போதும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டவண்ணம் இருப்பதாகவும் மக்கள் தொடர்ந்தும் அங்கிருந்து வெளியேறி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இனக்கலவரங்களுக்கு அடிப்படைக் காரணம் வறுமையே என்பதும் இக்கலவரங்களில் நூற்றுக்கணக்கானோர் இறந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, லாகோஸ் நகரில் கடந்த வாரம் இடம் பெற்ற ஆயுத களஞ்சிய தீ விபத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இதனால் ஏற்பட்ட மரண அவலம் அடங்குவதற்கு முன்னதாக இனக்கலவரம் மூண்டுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இதனால் லாகோஸ் நகரம் சோபை இழந்து சுடுகாடாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## ஈரான் எச்சரிக்கை

(தெஹ்ரான்)

தமது நாட்டின் அணு உலையின் மீது தாக்குதல் நடத்தும் திட்டத்தை கைவிடுமாறு ஈரான், இஸ்ரேலைக் கேட்டுள்ளதுடன்,

அவ்வாறு தாக்குதல் நடத்தப்படும் பட்சத்தில் தகுந்த பதிலடிதரப்படுமென ஈரான் கடுமையான எச்சரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது. (உ-5)

## தீவிரவாதிகள் இருவர் காஷ்மீரில் சரணடைவு

(ஜம்மு

காஷ்மீரில் இரு நாட்களாக முற்று கையிடப்பட்ட மசூதி ஒன்றிலிருந்த இரு தீவிரவாதிகள் சரணடைந்துள்ளனர்.

காஷ்மீரில் பாராமுல்லா மாவட்டத்தில் மசூதியில்ஹிஸ்புல் முஜாகுதீன் அமைப்பைச் சேர்ந்த இரு தீவிர வாதிகளே ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களுடன் சரணடைந்துள்ளனர். (து)

# உலக தரிசனம்

## சமாதானவழியில் முஷாரப் ஆர்வம்

(இஸ்லாமபாத்)

காஷ்மீர் உள்ளிட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பேச்சு வார்த்தை நடத்த இந்தியாவை வற்புறுத்த அனைத்து முயற்சிகளையும் எடுக்கப் போவதாக பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் மக்களுக்கு விடுத்த சிறப்புச் செய்தியில், அண்டை நாடுகளுடன் பதட்டமில்லாத சுமுகமான உறவையே பாகிஸ்தான்விரும்புவதாகவும் அதற்காக ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பிரச்சினைகளை சமாதான முறையில் தீர்த்துக்கொள்ளவிரும்புவதாகவும் தெரிவித்தார் (து)

### அரச சார்பற்ற நிறுவனங்கள்- அமைப்புகள்

# வறிய நாடுகளுக்கான உதவிகளை செம்மையான முறையில் செய்க

### இல்லையேல் எதிர்ப்பு கிளம்புமென எச்சரிக்கை

(நியூயோர்க்)

அரசசார்பற்ற நிறுவனங்கள், அமைப்புகள் என்பன வறிய நாடுகளில் வாழும் மக்களுக்கு செய்து வரும உதவிகளையும் செயற் திட்டங்களையும் செம்மையான முறையில் செய்து வர வேண்டும். இல்லாவிட்டால் அந்நாட்டு மக்களின் எதிர்ப்புக்களுக்கு ஆளாக நேரிடும் என்று நியூயோர்க்கில் நடைபெற்ற உலகப் பொருளாதார அமைப்பு' மாநாட்டில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

2 ஆயிரத்து700பிரதிநிதிகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் அபிவிருத்தியடையாத விவசாய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் துணிவகைகள், விவசாய உற்பத்திப் பொருட்களை அந் நாடுகள் சந்தைப் படுத்துவதற்கு இடமளித்து வரவேண்டும். அவ்வாறுஇடமளியாது இருந்தால் உலகமயமாக்கல் என்று கூறுவதில் அர்த்தமில்லை என ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் சுட்டிக்காட்டினார்.

அபிவிருத்தியடையாத வறிய நாடுகள் உள்ளூர் மூல வளங்களை உபயோகித்து, வெளிநாட்டு தனியார் முதலீடுகள்மூலம், உலகசந்தையில் முன்னேற வேண்டும்எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## காஸாவில் குண்டு வெடிப்பு தீவிரவாதிகள் ஐவர் பலி.

(ஜெருசலம்)

பலஸ்தீனத்தின் காஸா நகரின் தென்பகுதியில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் பலஸ்தீன விடுதலைக்கான ஜனநாயக முன்னணி என்ற தீவிரவாதஅமைப்பைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் அந்தஇடத்திலேயே உயிரிழந்தனர்.

தமது அமைப்பைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் கார் ஒன்றில் சென்று கொண்டிருந்ததாகவும் அந்தக் காரை இஸ்ரேலிய படையினரே இலக்கு வைத்து குண்டுத் தாக்குதல் நடத்தியதாகவும் அந்த அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு இஸ்ரேலை பழிவாங்கியே தீருவோமென்று அவர்கள் சூழுரைத்துள்ளனர்.

இத்தாக்குதல் தொடர்பாக பலஸ்தீன பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகையில் இஸ்ரேலிய படையினர் சமாதான முயற்சிகளை குழப்பும் வகையில் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் இஸ்ரேலுக்கு சமாதானத்தில் அக்கறையில்லை என்றும் தெரிவித்துள்னளர்.

இதேவேளை இத்தாக்குதல் தொடர்பில் தமக்கு எதுவுமே தெரியாது என்று இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ-5)

### பிரான்சில் லொறியில் பயணித்த

## இலங்கையர் மூவர் பொலிஸாரால்கண்டுபிடிப்பு

(பரிஸ்)

பிரான்சின் வடபகுதியில் கதிரியக்க உபகரணங்களை ஏற்றிக் கொண்டு சென்ற லொறி ஒன்றினுள் மறைந்திருந்த இலங்கையர் மூவரை பிரான்ஸ் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கோட்லைன்ஸ் என்றஇடத்தில் அமைந்துள்ள அணுசக்தி ஆலைக்கு இந்த லொறி சென்று கொண்டிருந்ததாகவும் அங்கு பாதுகாப்புகடமையிலிருந்த பொலிஸார் அந்த லொறியை சோதனையிட்டபோது இவர்கள் மூவரும் மறைந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கதிரியக்க உபகரணங்கள் இந்த லொறியில், கொண்டு செல்லப்பட்டதனால் இவர்கள் கதிர் வீச்சுக்கு ஆளாகியிருக்கலாமென்ற சந்தேகத்தில் உடனடியாக வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், பொலிஸ் விசாரணைகளின் பின்னர் மூவரும் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-8)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப.2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக உடுவில் சமநலசேவை நிலையத் தலைவர் செ. இலகுநாதனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய்க் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரமும் கலந்து கொள்கின்றனர். (செ)

## புலிகளின் தடையை நீக்க இரண்டு நிபந்தனைகள்

### வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு

(லண்டன்)

சமாதானப்பேச்சு வார்த்தைக்கு வசதியாக விடுதலைப் புலிகளின் தடையை தற்காலிகமாக நீக்க வேண்டுமாயின் அதற்கு அவர்கள் இரு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோதெரிவித்துள்ளார்.

லண்டனுக்கு விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் அங்குள்ள தனியார்தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் ஈழக் கோரிக்கையை கைவிடவேண்டும், ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் ஆகியஇரு கோரிக்கைகளையும் நிறைவேற்றுவார்களாயின் பேச்சுக்கு வசதியாக அவர்களின் தடையை தற்காலிகமாக நீக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார். (ந-4)

## தேர்தலில் பங்கேற்க முதலமைச்சர் அழைப்பு

(ஸ்ரீநகர்)

ஜம்மு காஷ்மீரசட்டசபைத் தேர்தலில் கூரியத் மாநாட்டுக் கட்சி தனது துப்பாக்கிக் கலாசாரத்தைக் கைவிட்டு போட்டியிட வேண்டுமென்று முதலமைச்சர் பாருக் அப்துல்லா தெரிவித்துள்ளார்

விரைவில் நடை பெறவிருக்கும் ஜம்மு காஷ்மீர் தேர்தலில் கூரியத் மாநாட்டுக்கட்சி போட்டியிட்டு தனது பலத்தைக் காட்ட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

தேர்தல் சுதந்திரமாகவும் உறுதியாகவும் நடைபெறும் என்று கூறிய அப்துல்லா யாரும் தேர்தலை வந்து கண்காணிக்கலாம் என்றும்தெரிவித்தார்.

இதேவேளை இந்திய மத்திய அரசின் காஷ்மீருக்கான தலைமைப் பிரதிநிதி கே.சி. பந் கூரியத் மாநாட்டுக் கட்சியினரை தேர்தலில் நிறுத்த முயற்சித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (து)

தூங்குக தூங்கிச் செயற்பால
தூங்கற்க
தூங்காது செய்யும் வினை
- குறள்

வலம்புரி

## அரசுக்கு அபகீர்த்தி

54-வது சுதந்திரதின நிகழ்வின் போது யாழ். செயலகத்தில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. புதிய அரசு இனப்பிரச்சினையை சமாதான முறையில் தீர்த்து வைக்கும் என்ற நம்பிக்கையில் தமிழ்மக்கள் தமது ஆதரவை ஐக்கிய தேசியமுன்னணிக்கு வழங்கியிருந்தனர்.

ஆனால் அந்நம்பிக்கை வீண்போனதாக மீனவத் தொழிலாளர்கள் உணர்ந்து கொண்டதன் விளைவே யாழ். செயலகத்தில் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்ட செயலாகும். யுத்த நிறுத்தம், சமாதான முயற்சிகள் நடக்கும் போது யாழ்.குடாக் கடலில் மீன்பிடிப்பதற்கான தடை அமுலில் இருப்பது, அரசின் இனவாதப் போக்கை வெளிக்காட்டுகிறது. என்னவிலை கொடுத்தும் சமாதானத்தை ஏற்படுத்துவோம் என ஐக்கிய தேசிய கட்சி தேர்தல் பிரசாரங்களில் கூறியபோதிலும், யாழ். குடாக் கடலில் தடைச் சட்டத்தை நீக்க முடியாமல் இருப்பது, அரசின் பழைய மனப்பாங்கில் இன்னமும் மாற்றம் ஏற்படவில்லை என்பதைச் சுட்டி நிற்கிறது.

கடல் வலயத் தடைச் சட்டத்தால் மீனவர்கள் பெரிதும் பாதிப்படைகிறார்கள் என ஆளுங் கட்சி அமைச்சர்கள் கூறுகின்ற போதிலும் இத் தடைச்சட்டம்பிறநாட்டு அரசாங்கத்தால் அமுல்ப்படுத்தப்படுவது போலவும், தாம் இது விடயத்தில் எதுவும் செய்ய முடியாதவர்களாகவும் காட்டிக் கொள்வது வேதனைக்குரிய விடயமாகும்.

54 வதுசுதந்திர தினத்தை தென்னிலங்கை மக்களும், முப்படைகளும், மகிழ்வாகக் கொண்டாடும் போது அரச செயலகம் ஒன்றில் கறுப்புக் கொடி ஏற்றப்பட்டது, சிங்கள இனம் தமிழ்மக்களுக்கு சமஉரிமையை வழங்கவில்லை. இலங்கையின் சுதந்திரதினம் என்பது ஒரு பகுதி மக்களுக்கான கொண்டாட்டம் என்பதை உலகநாடுகளுக்கு வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த ஏழு தினங்களாக மீனவர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது யாழ் சிவில் நிர்வாகத்தை கட்டிக் காப்பதாகக் கூறும் படையினரோ, அமைச்சர்களோ இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

# முன்னைய அரசின் முன்யோசனையற்ற அநாவசிய நடவடிக்கைகளே நாட்டின் பொருளாதாரத்தை படுகுழிக்குள் தள்ளியது

## பாராளுமன்றில் நிதியமைச்சர் கண்டித்து உரை

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் நிதி நிலைமைகள் திருப்திகரமாக இல்லையென ஐக்கிய தேசிய முன்னணி அரசின் நிதிஅமைச்சர் கே. என். சொக்சி தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை பாராளுமன்றம் சபாநாயகர் மைக்கல் பெரேரா தலைமையில் கூடிய போது கணக்கு அறிக்கையை சமர்ப்பித்து அங்கு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

கடந்த அரசின் 7 வருட ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்க்க தரிசனமற்ற பொருளாதார திட்டங்களாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

வருமானத்தைப் பெருக்கும் நோக்கில் முன் யோசனையின்றி மேற்கொள்ளப்பட்ட வரி அறவீடுகள், மற்றும் அநாவசிய நடவடிக்கைகள் இன்று பாரதூரமானவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த ஆண்டின் இறுதிக் காலாண்டுப் பகுதியில் பொருளாதாரம் மிகவும் மோசமாகப் பாதிப்புற்றிருந்தது.

இந்த நிலையில் புதிய அரசாங்கம் பல முன்னேற்றகரமான அம்சங்களுடன் முதலாவது வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளது.

இதேவேளை, கணக்கு அறிக்கை இரண்டு நிரல்களை கொண்டதெனவும் முதலாவது நிரல் 29 ஆயிரத்து 722 மில்லியன் ரூபாவைக் கொண்டதெனவும், இரண்டாவது நிரல் ஆயிரத்து 272 மில்லியன் ரூபாவைக் கொண்டதெனவும் அவர் கூறினார். (உ-5)

## கூ.ஊழியர்தொழிற் சங்கம் மீனவர் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மீனவகூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களால் தொடக்கப்பட்டநியாயமான மறியல் போராட்டத்திற்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஊழியர் தொழிற்சங்க அங்கத்தவர்கள் தங்களது முழு ஆதரவையும் தெரிவிக்கின்றனர்.

மறியல் போராட்டத்திற்கு உடனடியாக தீர்வுகிடைக்காவிட்டால் யாழ். மாவட்ட கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க அங்கத்தவர்கள் முதல் கட்டமாக யாழ். மாவட்ட மீனவ கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களுடன் இணைந்து ஒருநாள் அடையாள மறியல் போராட்டத்தில் ஈடுபடும் என்றும் பிரச்சினைதொடர்ந்தும், இழுத்தடிக்கப்பட்டால்மறியல் போராட்டத்தில் நிரந்தரமாக இணைந்து பிரச்சினைக்கு சாதகமான தீர்வு கிடைக்கும் வரை ஈடுபடுவதற்கு நிர்பந்திக்கப்படுவோம் என்பதனையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்த விரும்புகின்றோம்.

கூட்டுறவு ஊழியர் சங்கம் மீனவர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில்,

நாட்டில் இடம்பெற்றுவரும் போரினாலும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக நடைமுறையில் இருக்கும் கடல்வலயத் தடைச்சட்டத்தினாலும் வடக்கு கிழக்கு மீனவ சமுகம் அனுபவித்து வரும் பொருளாதார நெருக்கடிகளாலும், இடம்பெயர்வுகளினாலும், வதிவிட அழிவுகளாலும் அனுபவிக்கும் கஷ்டங்கள், துன்பதுயரங்கள் சொல்லில் அடங்கா.

மீனவசமுதாயம் வாழ்வா சாவா என்ற இறுதிக்கட்டப் போராட்டத்தின் விளிம்புக்கு தள்ளப்பட்ட நிலையில்தான், சுதந்திரமாக தொழிலில் ஈடுபடுவதற்கு கடல்வலய தடைச் சட்டத்தை நீக்கக் கோரி யாழ் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்கள ல் மறியல் போராட்டம் நடத்தப்பட்டு வருகின்றது.

இம்மறியல் போராட்டம் கடந்த ஒருவாரகாலமாக இடம்பெறுகின்ற போதிலும் அரசு எதுவித சாதகமான நடவடிக்கையும் எடுக்காது பிரச்சினையை இழுத்தடிப்பது மிகவும் துரதிஷ்டவசமானதாகும் என்று மேலும் குறிப்பிட்டுள்ளது.

## ரயில் தடம் புரண்டது பயணிகள் பத்திரமாக மீட்கப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கி நேற்றுமுன்தினமிரவு புறப்பட்டரயில் ஒன்றுநேற்று அதிகாலை நாவலப்பிட்டிக்கும் இங்குறு ஒயாவுக்குமிடையில் தடம்புரண்டது.

எனினும் அதில் பயணம் செய்த எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையென ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்ளது.

இதனால் மலையகத்திற்கான ரயில் போக்குவரத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

## காணாமற் போனோர்பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாநாட்டில் இருந்து கடந்த 1996,1997ம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை நடத்திவரும் விசேடபுலனாய்வுப் பிரிவினர் கீழ்குறிப்பிடப்படும் காணாமற்போனவர்களின் உறவினர்கள் மற்றும்சாட்சிகளை யாழ் பொலிஸ்நிலையத்திற்கு எதிர்வரும் 8ம்திகதி சமுகம் தருமாறு அறிவித்துள்ளனர்.

★ கந்தசாமி சுபாகரன்
(கோ.இல.பிஐ-9/88)
நீர்வேலிமத்தி
சாட்சி-சு வடிவேல் (கிராம அலுவலர்)

★ தேவதாசன் சுரேஷ்குமார்
(கோ.இல.பி.ஐ-9/219)
மத்தியூஸ் வீதி யாழ்ப்பாணம்
சாட்சி- இ ராஜேஸ்வரி

★ வேலுப்பிள்ளை உதயகுமார்
(கோ.இல.பி.ஐ-113)
கொடிகாமம்
சாட்சி-க.வேலுப்பிள்ளை

(உ.10)

## கள்வனைப் பிடிக்க முயன்றோர் கடிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

(மந்திகை)

கள்வனைப் பிடிக்க முயன்ற இளைஞர்களை, கள்வன் கடித்துக் குதறிய சம்பவம் கடந்த சனியன்று பருத்தித்துறை புலோலி தெற்கில் இடம் பெற்றுள்ளது.

இரவு நேரம் வீட்டார் விழிப்பாய் இருந்த வேளை நுழைந்த திருடன், தாயினதும் தந்தையினதும் கழுத்தில் இருந்த சங்கிலிகளை அறுத்துச் சென்றதைக் கண்ணுற்ற மகன் திருடனைக் கலைத்துச் சென்றபோது கள்வனின் கடிக்கு இலக்கானதாகவும்,

இச்சம்பவத்தில் திருடனைப் பிடிக்க உதவிய அயல் வீட்டு இளைஞனும் கடிகாயத்திற்கு ஆளானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுந்தரதாஸ் பிரகலதாஸ் (வயது 19) அயலவரான இராமச்சந்திரன் ஜெயதாஸ் (வயது 18) ஆகியோரே கடிகாயங்களுடன் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சம்பந்தப்பட்ட திருடன் பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ-23)

## தினசரி தியானம்

### அஹிம்சை

எங்கெங்கே பார்த்தாலும்
எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங்கு இருப்பது நீ
அன்றோ பராபரமே.

- தாயுமானவர்

பிறருக்கு நான் கேடு செய்யும் பொழுது உண்மையில் எனக்கே கேடு செய்துகொள்கிறேன். எல்லா உயிர்க்கும் அன்பாயிருக்கும் பாங்கை அண்ணலே, எனக்கு நீ நல்குவாயாக.

உயிர்களுக்கிடையிலுள்ள அடிப்படை ஒற்றுமையை அறியாதவன் பிற உயிர்களுக்குத் தீங்கு செய்கிறான். ஒரு கையானது மற்றொருகையை ஒறுக்குமாயின் அது தனக்கே கேடாய் முடியும். ஒரு ஜீவன் மற்றொரு ஜீவனை ஹிம்சிக்கும் இடத்துக் கடைசியில் அவன் தன்னையே ஹிம்சித்துக் கொண்டவனாகிறான். எல்லார்க்கும் நலமே நாடுதல் அஹிம்சை.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

## பிரதேச செயலக போட்டி முடிவுகள்

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும், வருடாந்த தடகளப்போட்டியின் முதன்நிலை குழுநிலைப் போட்டிகள், கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

நடைபெற்றகரப்பந்தாட்ட வலைப்பந்தாட்ட மற்றும் கிறிக்கெற் போட்டிகளில் கழகங்களின் நிலைவருமாறு;

கரப்பந்தாட்டம்
1-ம் இடம் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம்.
2-ம் இடம்: அச்சுவேலி ஸ்ரீவிக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம்.

வலைப்பந்தாட்டம்
1-ம் இடம்: கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக்கழகம்
2-ம் இடம். ஆவரங்கால் வீனஸ் விளையாட்டுக்கழகம்.

கிறிக்கெற்
1-ம் இடம் கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம்
2-ம் இடம் உரும்பிராய் ஒஸ்கா விளையாட்டுக்கழகம்.

(இ)

## கதவடைப்புக்கு ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழிலாளர்களால் நாளை நடத்தப்படவுள்ள குடாநாடு தழுவிய கதவடைப்புப் போராட்டத்திற்கு தமது முழு ஆதரவையும் வழங்குவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்டக் கிளை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது. (உ)

# ஐக்கிய தேசியக் கட்சி

## உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய

# அறிவித்தல்

யாழ். மாவட்டத்தில் 16 உள்ளூராட்சி சபைகளுக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு செய்துள்ளது.

வேட்பாளர் தெரிவில் 08.02.1962 இற்குப் பின்னும் 31.05.1982 இற்கு முன்னும் பிறந்த இளம் வயதினருக்கு 40 சதவீதமும், 08.02.1962 இற்கு முன் பிறந்தவர்களுக்கு 60 சதவீதமும் முன்னுரிமை வழங்கப்படவிருக்கின்றது.

இத் தேர்தலில் போட்டியிட விரும்புகின்றவர்கள் இன்று தமது விண்ணப்பங்களை அனுப்புவதுடன் இன்று மாலை 6.00க்கு முன்னதாக அமைச்சருடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

**தி. மகேஸ்வரன்**
இந்து கலாசார அமைச்சர்,
நாடாளுமன்ற உறுப்பினர்.
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல:- 2025, 3542.

[C/3452]

# கண்ணீர் அஞ்சலி

யா/ மல்லாகம் மகா வித்தியாலய ஆசிரியர்
திரு. நடராஜா ஆனந்தகுமார் அவர்களின்
அன்புத் தந்தையார்

**திரு. நாகலிங்கம் நடராஜா**

அவர்கள் 05.02.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ மல்லாகம் மகா வித்தியாலயம்.

[C/3451]

# வாழ்த்துகின்றோம்



ஓய்வுபெற்ற தபாலதிபர்

**லயன்.க.கனகராசா**

அவர்களுக்கு சமாதான நீதிவான் பதவி கிடைத்ததையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்

துரையர் குடும்பத்தினர்.

(C/3432)

## யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

யாழ் குடாநாட்டு வர்த்தக சங்கங்களுக்கான

## தமிழர் கூட்டமைப்பு சுயேட்சையாகப் போட்டி

(கொழும்பு)

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழர் தேசிய கூட்டமைப்பினர் சுயேட்சைக் குழுவாகப் போட்டியிடவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அரசு ஒத்தி வைத்தாலென்ன? ஒத்தி வைக்காவிட்டாலென்ன? தேர்தலில் போட்டியிட வேண்டிய நிர்ப்பந்தம் கூட்டமைப்பினருக்கு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

**தமிழ்க்கூட்டமைப்பு...**

இதற்கு வெளிநாடுகளின் உதவிகள் தேவைப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் மெலிந்த மொறகொட கருத்துத் தெரிவிக்கையில், மீன்பிடிப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதாயின் கடற்படை அதிகாரிகளுடனேயே பேச வேண்டியுள்ளது. இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (வ)

**யாழ். குடாவில்...**

என்பன காய்ச்சல் நோயாளிகளால் நிறைந்துள்ளது.

குடும்ப சுகாதாரம் மற்றும் சூழற் சுகாதாரம் என்பவற்றைப் பேணுமாறும் கொதித்தாறிய நீரைப் பருகுமாறும் சுகாதாரப் பிரிவினர் பொது மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர். (இ-10)

**மீனவர்களின்...**

எனது கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்து நேற்றுக் காலை பிரதமரையும், பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பனையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளேன்.

மிக விரைவில் யாழ் சென்று மீனவர்களின் பிரச்சினை குறித்து மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளதாகவும் அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளார். (ந-4)

**உள்ளூராட்சி...**

மைப்பின் எம்பிக்கள் பிரதமர் ரணிலிடம் தெரிவித்துள்ளனர். இதே வேளை அமைச்சர் மெலிந்த மொறஹொட நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்பேக்கைச் சந்தித்து உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான நிலைப்பாட்டை புலிகளிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (வ)

**நாளைய...**

மூடி ஆதரவு வழங்குவதென யாழ் வணிகர்கழகம் நேற்றுக் கூடி முடிவு செய்துள்ளது. இத் தீர்மானத்தின் அடிப்படையில் நாளை வர்த்தக நிலையங்களை மூடுமாறு யாழ் வணிகர் கழகம் வர்த்தகர்களை கோரியுள்ளது. (இ)

**நோர்வே...**

நடத்தி இறுதி முடிவு எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## இராமநாதன் நுண்கலைக்கழகம்

**நுண்கலைமாணி (இசை/நடனம்/பண்ணிசை/சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிகளுக்கான பல்கலைக்கழக அனுமதி - 2002 - 2003**

மேற்படி பட்டப்படிப்பிற்கான கற்கை நெறிகளுக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியுடையவர்களிடமிருந்து 06.03.2002 திகதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கற்கை நெறிக்காலம்:- நான்கு வருடங்கள்.

**அனுமதிக்கான பொது நிபந்தனைகள்:**

**1. நுண்கலைமாணி - இசை (கர்நாடக சங்கீதம்)**

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பழைய/ புதிய பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழ்கத்திற்கு அனுமதி பெறத் தகுதிபெற்றுள்ளதோடு சித்திபெற்ற பாடங்களில் சங்கீத்தையும் ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**2. நுண்கலைமாணி - நடனம்**

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பழைய/ புதிய பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சை எடுத்து மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதிபெற்றுள்ளதோடு சித்திபெற்ற பாடங்களில் பரதநாட்டியத்தையும் ஒரு பாடமாகக் கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

**3. நுண்கலைமாணி - பண்ணிசை**

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பழைய/ புதிய பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சை எடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதிபெற்றுள்ளதோடு சித்திபெற்ற பாடங்களுள் சங்கீதம்/ தமிழ்/ இந்து நாகரிகம்/ இந்து சமயம் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் சிறப்புச் சித்தி பெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்

**முக்கிய குறிப்பு:**

மேற்குறிப்பிட்ட கற்கை நெறிகளுக்குரிய அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் ஆற்றுகைப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**4. நுண்கலைமாணி - சித்திரமும் வடிவமைப்பும்**

2001ஆம் ஆண்டு ஆகஸ்ட் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பழைய/ புதிய பாடத்திட்டங்களின் கீழ் பரீட்சை எடுத்து பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நிபந்தனைகளுக்கு ஏற்ப பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதிபெற்றுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையோராவர்.

மேற்குறித்த கற்கை நெறிக்குரிய அனுமதிக்கான விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்குத் (Aptitude Test) தோற்றுதல் வேண்டும். முதல் நிலையி[illegible] தெரிவு செய்யப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுத[illegible] வேண்டும்.

**முக்கிய குறிப்பு:**

1. அனைத்துக் கற்கை நெறிகளுக்குரிய விண்ணப்பதாரிகள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுப் பத்திரத்தின் Score போட்டோ பிரதியொன்றை விண்ணப்பத்துடன் தவற[illegible] இணைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் க.பொ.த. உ[illegible] பெறுபேற்றுப் பத்திரத்தினதும், மொத்தப் புள்ளிகளி[illegible] போட்டோப் பிரதிகளை எல்லா விண்ணப்பதாரிகளும் இணைக்க வேண்டும்.

   க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் மட்டும் சி[illegible] பெற்றோர் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றமை[illegible] நிரூபிக்கும் ஆவணத்தின் போட்டோப் பிரதியும் விண்ண[illegible] படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

2. விண்ணப்பதாரிகள் தமது விருப்பத்துக்குரிய கற்கை நெறிகளுக்கு முன்னுரிமையின்படி விண்ணப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமையாத, பூரணப் படுத்தப்படாத, குறிப்பிட்ட ஆவணத்தின் போட்டோப்பிரதி இணைக் கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு [illegible]

## யாழ் மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்

### யாழ் குடாநாட்டு வர்த்தக சங்கங்களுக்கான அன்பான வேண்டுகோள்

மீனவர்களின் போராட்டம் ஓர் நீதியானது என்பதால் அவர்கள் மேற்கொள்ளும் போராட்டத்திற்கு ஆதரவாக நாளை (07.02.2002) வியாழக்கிழமை குடாநாட்டு சகல வர்த்தகர்களும் கடைகளைப் பூட்டி ஹர்த்தால் அனுஷ்டிப்பிற்கு ஆதரவு வழங்கும் வண்ணம் சகல வர்த்தகர் சங்கங்களையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- நன்றி -

யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

[C/3444]

**சூழல் தனைப் பேணிடுவோம் வாருங்கள் - அதில் கோடி கோடி நன்மையுண்டு கேளுங்கள்.**

(C/3450)

(இ)

### நோர்வே...

நடத்தி இறுதி முடிவு எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதே வேளை நோர்வேயின் சமாதான தூதுக்குழு நேற்று லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடந்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (வ)

### இராணுவச்...

இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட சிறுமி திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மூன்று இராணுவத்தினர் உவர்மலை பகுதியில் உள்ள வைரவர் கோயில் அருகில் வைத்து ஆண்டு இரண்டில் படிக்கும் அச்சிறுமியை பலாத்காரமாக கோயிலுக்குப் பின்னால் இழுத்துச் சென்று வல்லுறவுக்கு உட்படுத்த முயற்சித்த போது சிறுமி அலறத் தொடங்கினார் என்றும் அதனைக்கேட்டு அயலவர்கள் ஓடிச்சென்று சிறுமியைக் காப்பாற்றினர் என்றும் தெரியவருகிறது.

மக்களின் ஆரவாரத்தின் மத்தியில் மற்ற இரண்டு சிப்பாய்களும் தப்பி ஓடிவிட்டனர். மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட இராணுவச்சிப்பாய் மரமொன்றுடன் கட்டிவைக்கப்பட்டார். பொலிசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, பொலிஸ் கோஸ்டியொன்று உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து சென்று, மரத்துடன்கட்டி வைக்கப்பட்ட இராணுவச்சிப்பாயை பொலிஸ் நிலையத்திற்குக் கூட்டிச் சென்றது. சம்பந்தப்பட்ட சிப்பாய் மதுபோதையில் காணப்பட்டார் என்று பொலிசார் தெரிவித்தனர். (ந)

... அறிவுறுத்தப்படுகின்றனர்.

3. மேற்குறித்த கல்வித் தகைமைகளுக்கு அமையாத, பூரணப்படுத்தப்படாத, குறிப்பிட்ட ஆவணத்தின் போட்டோப்பிரதி இணைக்கப்படாத, தெளிவில்லாத, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு கிடைக்கப் பெறாத விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவங்களை யாழ். பல்கலைக்கழக சிறாப்பர் கருமபீடத்திலோ, யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையிலோ, ரூபா 150/= செலுத்திய பற்றுச் சீட்டை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

4. தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ். பல்கலைக் கழகம் என்னும் பெயருக்கு ரூபா 150/=ஐச் செலுத்திப் பெற்றுக் கொண்ட காசுக் கட்டளையுடன் முத்திரை ஒட்டப்பட்ட சுயவிலாசம் இடப்பட்ட 20 X 10 செ.மீ. அளவுள்ள கடித உறையை கொழும்பு ஸ்ரோஸ்/ அலுவலகம், சென்ரல் றோட், கொழும்பு 12. தொலைபேசி இல: 435620 என்னும் முகவரிக்கு அல்லது உதவிப் பதிவாளர் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் அல்லது உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

5. விண்ணப்பங்கள் 23 X 10 செ.மீ அளவு கொண்ட கடித உறையில் இடதுபக்க மூலையில் நுண்கலைமாணி (இசை/ நடனம்/ பண்ணிசை/ சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சை/ தகுதிகாண் பரீட்சை/ ஆற்றுகைப் பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், வவுனியா வளாகத்திலும் இடம்பெறும்.

**விண்ணப்பம் அனுப்ப/ ஒப்படைக்க வேண்டிய முகவரி:**

உதவிப் பதிவாளர்/ கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

- பதிவாளர் -

[C/3446]

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.